முருகப்பெருமான் துணை

**மகான் அருணகிரிநாதர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

11.07.2021, ஞாயிற்றுக்கிழமை

1. அரங்கனே அரசனே தருமனே
அண்ணலாக வந்த தேசிகனே
வரங்கள் தந்து மக்களுக்கு
வாழ்வளிக்க வந்த தவராசனே
2. அரசனே உன் தொண்டர்படை வழி
அகிலம் மாற்றம் காணுமென
வரமென துல்லிய ஆசிதனை
வழங்குவேன் பிலவ மிதுன திங்கள்
3. திங்களிலே இருபானேழ்திகதி கதிர் வாரம்
(பிலவ வருடம் ஆனி மாதம் 27ம் நாள், 11.07.2021 ஞாயிற்றுக்கிழமை)
தெரிவிப்பேன் அருணகிரிநாதர் யானும்
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
ஓம் எனும் பிரணவ சக்தி பரவிட
4. பரவிட இந்தப் பேருலகம்
பாதுகாப்பும் வளமும் கண்டடையும்
துறவியாக அரங்கஞானி தரும்
தூய ஞான கொள்கை வழி
5. வழிதனை உலகமக்கள் தானும்
வணங்கி ஏற்றுத் தொடர
பழிபாவ செயல்களை விட்டு
பரோபகார குணநலன்கள் பெருகி
6. பெருகியே சகோதர சமத்துவ
பெருந்தன்மையான நிலை கூடி
ஆறுமுகன் அரங்கன் வழிபாட்டின்
அவசியமதை உணர்ந்து தெளிந்து
7. தெளிந்து தொடர் வழிபாடு செய்து
தேசிகனை குருவாய் ஏற்று
பலந்தரும் தீட்சை அடைந்து
பணிந்து ஞானவழித் தொடர
8. தொடரும் மக்கள் படை மூலம்
திருவருள் பலம் மிகுதியாகி
இடர்என்பதே இனி இல்லாத
ஏற்றம் தரும் ஞானபூமியாக உலகம்
9. உலகம் மாற்றம் காணும்
உயர் ஞானியின் வழியில்
உலகமாற்றம் செய்யும் சேவையில்
உரைத்திடுவேன் அருணகிரி என் சக்தியும்

10. சக்தியும் கலந்து அருள
சடாட்சர தீட்சை பெற்றபலன்
பக்திவழி வரும் மக்களுக்கு
பாதுகாப்பாக என் அருளால் கிட்டும்

11. கிட்டவே ஆறுமுகனார் ஆசி
குருவரங்கன் கரம்பட வந்து
கட்டம் போக்கும் சர்வபலமாய்
கண்டுரைத்த துல்லிய ஆசி முற்றே

–சுபம்–